<u>நந்திவரம்–கூடுவாஞ்சேரி நகராட்சி</u>
<u>நகர்மன்ற சிறப்பு கூட்டம்</u>

2022 ஆம் ஆண்டு மே மாதம் 23 நாள் திங்கள் கிழமை காலை 11.00 மணிக்கு நந்திவரம் – கூடுவாஞ்சேரி நகராட்சி அலுவலகத்தில் நடைபெறும் நகர்மன்ற சிறப்பு கூட்டம்.

நகராட்சி அலுவலகம்,
நந்திவரம்–கூடுவாஞ்சேரி
நாள். 23.05.2022

**நகர் மன்ற தலைவர்**
**நந்திவரம்–கூடுவாஞ்சேரி நகராட்சி.**

---

பொருள் எண். 1

நந்திவரம்–கூடுவாஞ்சேரி நகராட்சியில் பொது சுகாதார பிரிவில் கொரோனா தடுப்பு நடவடிக்கையின் முன்னெச்சரிக்கை பணிகள் மற்றும் டெங்கு ஒழிப்பு விழிப்புணர்வு பணிகள், தனியார் மூலம் ஆட்கள் வெளிக்கொணர்வு தூய்மை பணியாளர் பொது நலன் கருதி துரித வேகத்தில் நடைபெற்று வருகின்றது. இந்நிலையில் மேற்காணும் பொது சுகாதார பணிகளுக்குண்டான ஒப்பந்தப்பணிகள் மார்ச்–31–2022ல் முடிவடைந்தது. நகர்புற உள்ளாட்சி தேர்தல் முடிந்து நகரமன்ற கூட்டம் நடைபெற்ற குறுகிய காலத்தில் புதிய ஒப்பந்த புள்ளி கோர இயலாத சூழ்நிலை இருந்ததால் தூய்மைப்பணியின் தொடர் அவசியம் மற்றும் இதர பணிகளின் அவசியம் கருதி , தற்போது ஒப்பந்த பணி மேற்கொண்டு வரும் கீழ்காணும் நிறுவனங்களுக்கு ஏற்கனவே வழங்கிய அதே விலை விகிதத்தில் பணிகள் மேற்கொள்ள நகரமன்ற ஒப்புதலுடன் ஏப்ரல், மே மாதங்களுக்கு பணி நீட்டிப்பு செய்யப்பட்டது. தற்போது கீழ்காணும் பணிகளுக்கு புதிய ஒப்பந்த புள்ளி கோர நகராட்சி நிர்வாக இயக்குநரிடம் உரிய அனுமதி வழங்க கோரி முன் மொழிவு அனுப்பப்பட்டுள்ளது. இந்நிலையில் பொது சுகாதார பணி மற்றும் இதர பணியின் அவசர அவசியம் கருதி, நகராட்சி நிர்வாக இயக்குநர் வழங்கிய அறிவுரையின் படி, உரிய அனுமதி பெற்று புதிய ஒப்பந்த புள்ளி கோரும் வரை அல்லது எதிர் வரும் ஜூன் மற்றும் ஜூலை ஆகிய இரண்டு மாதங்களுக்கு ஏற்கனவே பணி செய்யும் கீழ்காணும் நிறுவனங்களுக்கு ஒப்பந்த பணி நீட்டிப்பு செய்ய மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணியின் பெயர் | ஒப்பந்ததாரர் பெயர் | பணி நீட்டிப்பு காலம் |
|---|---|---|---|
| 01 | திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் பழைய வார்டு எண்.01 முதல் 12 வரையிலான வீடுகளில் வீடுவீடாக மக்கும் குப்பை, மக்காத குப்பை தரம்பிரித்து வாங்குதல் பணி செய்தல் | DUDS Pvt.Ltd | இரண்டு மாதகாலம் (ஜூன் மற்றும் ஜூலை 2022) |

| | | | |
|---|---|---|---|
| 02 | திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் பழைய வார்டு எண்.13 முதல் 18 வரையிலான வீடுகளில், வீடு வீடாக மக்கும் குப்பை, மக்காத குப்பை தரம் பிரித்து வாங்குதல், எருவாக்குதல் பணி செய்தல் | Green City Social Service Society | இரண்டு மாதகாலம் (ஜுன் மற்றும் ஜுலை 2022) |
| 03 | Out Sourcing of 55 Nos of Non power for Dengu Breathing control Activities for 30 day at Nandivaram-Guduvancheri Municipality | Bluee Gold Solutions | இரண்டு மாதகாலம் (ஜுன் மற்றும் ஜுலை 2022) |
| 04 | Outsourcing of 41-Nos of Non Power for Computer Operation, Office Assistant, Driver, Street Light Maintenance, Water Supply Maintenance and Cleanliness work for 30- days at Nandivaram-Guduvancheri Municipality. | Bluee Gold Solutions | இரண்டு மாதகாலம் (ஜுன் மற்றும் ஜுலை 2022) |
| 05 | ஆண்டு ஒப்பந்தம்–நந்திவரம் கூடுவாஞ்சேரி பேரூராட்சி –2021–22 ஆம் ஆண்டிற்கு குடிநீர் விநியோக பிரிவில் ஏற்படும் பழுதுகள் மோட்டார், சிறு மின் விசை பம்பு உடைப்புகள், கை பம்புகள் வார்டு எண்.10 முதல் 18 வரை பழுது பார்த்தல் பணிக்கு ஆண்டு ஒப்பந்தபடி மேற்கொள்ளுதல். | M/s. குமரன் எலக்ட்ரிகல்ஸ் | இரண்டு மாதகாலம் (ஜுன் மற்றும் ஜுலை 2022) |
| 06 | ஆண்டு ஒப்பந்தம் – நந்திவரம் கூடுவாஞ்சேரி பேரூராட்சி – 2021–22ஆம் ஆண்டிற்கு குடிநீர் விநியோக பிரிவில் ஏற்படும் பழுதுகள், மோட்டார், சிறு மின் விசை பம்பு உடைப்புகள், கை பம்புகள் வார்டு எண்.01 முதல் 09 வரை பழுது பார்த்தல் பணிக்கு ஆண்டு ஒப்பந்தப் பணி மேற்கொள்ளுதல் | திரு.L. புன்னியகோட்டி | இரண்டு மாதகாலம் (ஜுன் மற்றும் ஜுலை 2022) |
| 07 | ஜே சி பி வாகனம் வாடகை அடிப்படையில் சப்ளை செய்தல் பணி (வாடகை, டீசல், ஆயில், டிரைவர் பேட்டா உட்பட ஒரு நடைக்கு) | ஓம் சக்தி எண்டர்பிரைசஸ் | இரண்டு மாதகாலம் (ஜுன் மற்றும் ஜுலை 2022) |
| 08 | திடக்கழிவுகள் அகற்றுவதற்க்காக டிப்பர் லாரிகள் சப்ளை செய்தல் பணி (வாடகை, டீசல், ஆயில், டிரைவர் பேட்டா உட்பட ஒரு நடைக்கு) | ஓம் சக்தி எண்டர்பிரைசஸ் | இரண்டு மாதகாலம் (ஜுன் மற்றும் ஜுலை 2022) |

| | | | |
|---|---|---|---|
| 09 | நந்திவரம்–கூடுவாஞ்சேரி நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் குடிநீர் பற்றாக்குறை உள்ள பகுதிகளுக்கு மட்டும் தினசரி 6000 லிட்டர் கொள்ளவு கொண்ட டிராக்டர் வாயிலாக குடிநீர் வழங்குதல் | ஓம் சக்தி எண்டர்பிரைசஸ் | இரண்டு மாதகாலம் (ஜுன் மற்றும் ஜுலை 2022) |
| 10 | குப்பை வடிகால் கழிவு மண் அகற்றுதல் திடக்கழிவு மேலாண்மை பணிகளுக்கான வாடகை டிராக்டர் பணிக்கு | T.Sundaram Tractor | இரண்டு மாதகாலம் (ஜுன் மற்றும் ஜுலை 2022) |
| 11 | நந்திவரம்–கூடுவாஞ்சேரி நகராட்சி ஆணையர் பயன்பாட்டிற்கு என தனியாக அரசு வாகனம் இல்லாததால் செங்கல்பட்டு வட்டார போக்குவரத்து அலுவலர் அவர்கள் நிர்னயம் செய்த வாடகை வாகன விலை விகித அடிப்படையில் வழங்கப்பட்ட வாடகை வாகன | Laki Enterprises | இரண்டு மாதகாலம் (ஜுன் மற்றும் ஜுலை 2022) |

**அலுவலக குறிப்பு** – நிர்வாக நலன், தூய்மை பணியின் அவசியம் மற்றும் குடிநீர் பணியின் அவசியம் கருதி மேற்கண்ட வ. எண்01 முதல் 11 வரையிலான ஒப்பந்தப்பணிகளை, ஜுன்மற்றும் ஜுலை – 2022 மாதங்களுக்கு பணி நீட்டிப்பு செய்து மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்.38**

வ.எண்.01 மதல் 11 வரையிலான பராமரிப்பு பணிகளுக்கு ஜீன்–2022 முதல் ஜீலை–2022 ஆகிய இரண்டு மாதங்களுக்கு பணி நீட்டிப்பு செய்திட மன்றம் அனுமதி வழங்கப்படுகின்றது.

பொருள் எண் : 2

நந்திவரம்–கூடுவாஞ்சேரி நகராட்சி – கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டு திட்டம் (KNMT) 2021–22–ன் கீழ் இந்நகராட்சிக்கு கீழ்க்கண்டுள்ள பணிகளுக்கு அரசாணை (M.S) எண். 73 – நாள்: 13.05.2022–ல் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அதன் விவரம் கீழ்க்கண்டுள்ளவாறு அட்டவணைப்படுத்தப்படுகிறது.

| வ. எண். | பணியின் பெயர் | மதிப்பீட்டு தொகை |
|---|---|---|
| 01 | வார்டு எண் – 13, புல எண்–260 நந்தீஸ்வரர் தாங்கள் குளப் பணி | 192.00/ இலட்சம் |
| 02 | வார்டு எண்.12 மகாலட்சுமி விரிவு எண். 7– ல் பூங்கா வளரச்சி பணி மேற்கொள்ளுதல் | 41.33/ இலட்சம் |

மேற்க்கண்ட இரு பணிகளுக்கும் நிர்வாக அனுமதி வழங்கப்பட்ட விவரத்தினை மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு** : மன்றம் பதிவு செய்யலாம்.

**தீர்மானம் எண்.39**

மன்றம் அனுமதி வழங்கப்படுகின்றது.

பொருள் எண் : 3

நந்திவரம்–கூடுவாஞ்சேரி நகராட்சி – பொது நிதி பணிகள் 06.05.2022 தேதியில் கோரப்பட்ட தெரு மின்விளக்கு பணிகளுக்கு கீழ்க்கண்டுள்ளவாறு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது.

| வ. எண். | பணியின் பெயர் | மதிப்பீட்டு தொகை (இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர்களின் பெயர் | விலை விகிதம் | |
|---|---|---|---|---|---|
| | | | | குறைவு | அதிகம் |
| 01 | நந்திவரம்–கூடுவாஞ்சேரி நகராட்சிக்குட்பட்ட வார்டுகளில் பழுதடைந்துள்ள தெருமின்விளக்குகளை சரி செய்ய தேவைப்படும் உதிரி பாகங்கள் விநியோகம் செய்தல் – பணி | 9.80 | திருவா. ஸ்ரீநிவாசா எலக்ட்ரிக்கல்ஸ் | குறைவு 0.16% | – |
| | | | திருவா. வசந்தகுமார் & கோ | – | அதிகம் 1.20 |
| 02 | நந்திவரம்–கூடுவாஞ்சேரி நகராட்சிக்குட்பட்ட வார்டு பகுதிகளில் உள்ள High Mast Light மற்றும் Mini High Mast Light விளக்குகளுக்கு பழுது பார்த்தல் பணி மற்றும் உதிரிபாகங்கள் விநியோகம் செய்தல் பணி | 9.50 | திருவா.ஸ்ரீநிவாசா எலக்ட்ரிக்கல்ஸ் | குறைவு 0.16% | – |
| | | | திருவா. வசந்தகுமார் & கோ | – | அதிகம் 1.25 |

மேற்க்கண்ட ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள திருவா. ஸ்ரீநிவாசா எலக்ட்ரிக்கல்ஸ் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை நகர மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கி நடவடிக்கை மேற்க்கொண்டமைக்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அ.கு : நகரமன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று தெரு மின் விளக்கு பணியின் அவசியம் கருதி நடவடிக்கை மேற்கொண்டமைக்கு மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்.40**

மன்றம் அனுமதி வழங்கப்படுகின்றது.

பொருள் எண் : 4

நந்திவரம்–கூடுவாஞ்சேரி நகராட்சியில் 2022–2023ம் ஆண்டு பொதுநிதிப்பணிகள் வார்டுகளுக்கு 42 வாட்ஸ் எல்.இ.டி தெரு விளக்கு விநியோகிக்கும் பணிகள் செய்ய இவ்வலுவலக ஒப்பந்தப்புள்ளி விளம்பரம் நாள் 27.04.2022ன் படி ஒப்பந்தப்புள்ளி 13.05.2022 அன்று கோரியதில் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளவாறு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது.

| வ. எண். | வேலையின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை ரூ. இலட்சத்தில் | ஒப்பந்ததாரர்கள் | ஒப்பந்த சதவீதம் |
|---|---|---|---|---|
| 1 | Supply of 40 Watts LED Street Light Fitting at Ward No.1,2 & 3 | 9.90 | 1. L.வெங்கடேசன்<br>2. MK.பாலாஜி | 0.11%குறைவு<br>4.73%அதிகம் |
| 2 | Supply of 70 Watts LED Street Light Fitting at Ward No.4,5 & 6 | 9.90 | 1. L.புண்ணியகோட்டி<br>2. MK.பாலாஜி | 0.15%குறைவு<br>4.73%அதிகம் |
| 3 | Supply of 70 Watts LED Street Light Fitting at Ward No.7,8 & 9 | 9.90 | 1. குமரன் எலக்ட்ரிகல்ஸ்<br>2. MK.பாலாஜி | 0.12%குறைவு<br>4.73%அதிகம் |

11.04.2022–ம் நாளிட்ட இந்நகரமன்ற தீர்மானத்தில் நிர்வாக அனுமதி வழங்கிய வ.எண்.01 முதல் 10 வரையிலான பணிகளுக்கு வ.எண்: 01 முதல் 03 வரையுள்ள பணிகளுக்கு மட்டும் பணியின் அவசியம் கருதி 13.05.2022–ல் கோரப்பட்ட ஒப்பந்தப்புள்ளியில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரர்களுக்கு மன்ற அனுமதியை எதிர்நோக்கி பணியாணை நகரமன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டமைக்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அ.கு. மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்.41**

மன்றம் அனுமதி வழங்கப்படுகின்றது.

பொருள் எண் : 5

நந்திவரம்–கூடுவாஞ்சேரி நகராட்சி – இந்நகராட்சியில் பொறியியல் பிரிவு, பொது சுகாதார பிரிவு மற்றும் பொது பிரிவு ஆகிய பிரிவுகளின் மூலம் மேற்கொள்ளும் அத்தியாவசிய பணிகளான வாகன இயக்கம், தூய்மை பணிகள், கணிணி இயக்கம் ஆகிய பணிகளில் ஏற்படும் தொய்வுகளுக்கு சம்மந்தப்பட்ட பணியாளர்கள் தங்களது சொந்த செலவில் பொருட்கள் வாங்கிய விதத்தில் கீழ்க்கண்டுள்ளவாறு செலவினம் மேற்க்கொள்ளப்பட்டுள்ளது.

| வ.எண். | பொருளடக்கம் | செலவுத் தொகை |
|---|---|---|
| 01 | வாகன செலவு – Bill .எண்.1116 | 4450/– |
| 02 | வாகன செலவு – Bill .எண்.1093 | 3275/– |
| 03 | நகர மன்ற கூட்டரங்கிற்கு அறைக்கு வாடகை சேர், நாற்காலி இறக்கம் – 1315 | 5300/– |
| 04 | நகர்மன்ற தலைவர் பெயர் பலகை – 175 | 1300/– |
| 05 | 12/A Toner Cartridge Refilling | 2500/– |
| 06 | Net Green 2/Nos வாகன பயன்பாட்டிற்கு | 1200/– |
| 07 | பசுமை தீர்ப்பாய வழக்கிற்கு வழக்கறிஞர், நேரில் சென்ற பயண செலவு மற்றும் நகல் எடுத்து Spiral Binding, இதர அலுவலக செலவினம் (இரு முறை) | 1800/– |
| | | 19825/– |

மேற்க்கண்ட தொகைகள் அவசர அவசியம் கருதி சொந்த செலவில் செலவினம் மேற்கொண்டுள்ளதால் தொகையாக எடுத்து செலவினத்தை ஈடு செய்ய மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அ.கு. மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்.42**

மன்றம் அனுமதி வழங்கப்படுகின்றது.

பொருள் எண்.6

அரசாணை (நிலை) எண்.52 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நநி4) துறை நாள் 30.03.2022 மற்றும் நகராட்சி நிர்வாக இயக்குநர் சுற்றறிக்கை ந.க.எண்.40032/2012/ஆர்1, நாள்.01.04.2022இல் தெரிவிக்கப்பட்டுள்ள வழிகாட்டு நெறிமுறைகளின்படி, கீழ்கண்டவாறு 01.04.2022 முதல் சொத்துவரி/காலிமனைவரியினை பொதுச்சீராய்வு மேற்கொள்ள தெரிவிக்கப் பட்டுள்ளதற்கிணங்க இந்நகர்மன்ற தீர்மான எண்.26 நாள் 11.04.2022–ல் ஒப்புதல் வழங்கப் பட்டுள்ளது.

<u>சொத்துவரி:</u>

குடியிருப்பு கட்டடங்கள் (Residential Building) :

| பரப்பளவு (ச.அடி) | உயர்வு செய்வதற்கானகாரணி |
|---|---|
| <=600 | 1.25 |
| 601-1200 | 1.50 |
| 1201-1800 | 1.75 |
| >1800 | 2.00 |

**குடியிருப்பு அல்லாத கட்டடங்கள் (Non-Residential Building) :**

| வகைப்பாடு | உயர்வு செய்வதற்கானகாரணி |
|---|---|
| தொழிற்சாலைகள் | 1.75 |
| வணிக பயன்பாட்டு கட்டடங்கள் | 2 |
| சுயநிதி பள்ளி மற்றும் கல்லூரி கட்டடங்கள் | 1.75 |

மண்டல அடிப்படை மதிப்பு நிர்ணயம் செய்வது சம்மந்தமாக மேற்கண்ட பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ள உயர்வு காரணிகள் கீழ்கண்டவாறு விவரிக்கப்படுகிறது:

1) 600 சதுர அடிக்கும் குறைவான பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டடங்களுக்கு 25 % சொத்துவரி உயர்வு செய்யப்படவேண்டும்.
2) 601 முதல் 1200 சதுரஅடி வரை பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டடங்களுக்கு 50 % சொத்துவரி உயர்வு செய்யப்படவேண்டும்.
3) 1201 முதல் 1800 சதுர அடி வரை பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டடங்களுக்கு 75 %சொத்துவரி உயர்வு செய்யப்படவேண்டும்.
4) 1800 சதுர அடிக்கு அதிகமாக பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டடங்களுக்கு 100 % சொத்துவரி உயர்வு செய்யப்படவேண்டும்.
5) வணிகப் பயன்பாட்டு கட்டடங்களுக்கு தற்போதுள்ள சொத்துவரியில் 100% சொத்துவரி உயர்வு செய்யப்படவேண்டும்.
6) தொழிற்சாலை பயன்பாட்டு கட்டடம் மற்றும் சுய நிதி பள்ளி மற்றும் கல்லூரி கட்டடங்களுக்கு தற்போதுள்ள சொத்துவரியில் 75% சொத்துவரி உயர்வு செய்யப்படவேண்டும்.

**காலிமனை வரி சீராய்வு:**

காலிமனை வரிவிதிப்பிற்கு, 1 சதுர அடி நிலத்திற்கு தற்போதுள்ள அடிப்படை மதிப்பு 100 சதவீதம் உயர்வு செய்து காலிமனை வரி பொது சீராய்வு செய்யப்பட வேண்டும். மேலும், சொத்து வரிவிதிப்பு செய்யும் போது கட்டடத்தின் பரப்பளவிற்கு இரண்டு மடங்கிற்கு மேல் உள்ள காலியிடத்திற்கு சொத்து வரியுடன் சேர்த்து காலிமனை வரி வரிவிதிப்பு செய்யப்பட வேண்டும்.

கட்டிடங்களுக்குசொத்துவரிவிதிப்புசெய்திடபுதியஅடிப்படைமதிப்புகணக்கீடு

| வ. எண் | தற்போதயமண்டலம் | பழையநகரமன்றதீர்மானம் எண்.117நாள். 27.11.1998ன்படி அடிப்படைமதிப்புஒருசதுர அடிக்குமண்டலமதிப்பு | புதிதாகநிர்ணயிக்கப்படும் மண்டலமதிப்பு | | |
|---|---|---|---|---|---|
| | | | பரப்பளவு (ச.அடி) /உபயோகம் | உயர்வுசெய்வதற்கானகாரணி | புதியமண்டலமதிப்பு (ஒருச.அடிக்கு) |
| 1 | A | 1.00 | குடியிருப்பு | | |
| | | | <=600 | 1.25 | 1.25 |
| | | | 601–1200 | 1.50 | 1.50 |
| | | | 1201–1800 | 1.75 | 1.75 |
| | | | >1801 | 2 | 2.00 |
| | | | வணிகம் | 2 | 2.00 |
| | | | தொழிற்சாலை | 1.75 | 1.75 |
| | | | சுயநிதிபள்ளிமற்றும் கல்லூரிகட்டிடங்கள் | 1.75 | 1.75 |
| 2 | B | 0.80 | குடியிருப்பு | | |
| | | | <=600 | 1.25 | 1.00 |
| | | | 601–1200 | 1.50 | 1.20 |
| | | | 1201–1800 | 1.75 | 1.40 |
| | | | >1801 | 2 | 1.60 |
| | | | வணிகம் | 2 | 1.60 |
| | | | தொழிற்சாலை | 1.75 | 1.40 |
| | | | சுயநிதிபள்ளிமற்றும் கல்லூரிகட்டிடங்கள் | 1.75 | 1.40 |
| 3 | C | 0.50 | குடியிருப்பு | | |
| | | | <=600 | 1.25 | 0.63 |
| | | | 601–1200 | 1.50 | 0.75 |
| | | | 1201–1800 | 1.75 | 0.88 |
| | | | >1801 | 2 | 1.00 |
| | | | வணிகம் | 2 | 1.00 |
| | | | தொழிற்சாலை | 1.75 | 0.88 |
| | | | சுயநிதிபள்ளிமற்றும் கல்லூரிகட்டிடங்கள் | 1.75 | 0.88 |

## காலிமனைகளுக்குவரிவிதிப்புசெய்திட அடிப்படைமதிப்புகணக்கிடும் முறை:-

| வ. எண் | காலியிடம் அமைவிடத்தின் தன்மை | மண்டலம் (Zone) | நகர்மன்றதீர்மான எண்.90 நாள்.30.09.2009 ன் படி அடிப்படைமதிப்பு 1 சதுரஅடிக்குவிவரம் (பைசாவில்) | தற்போது அடிப்படைமதிப்பு 100 % உயர்வுசெய்து 1 சதுரஅடிக்குவிவரம் (பைசாவில்) |
|---|---|---|---|---|
| 1 | முக்கியமானமையபகுதிகளில் குறிப்பாகஜி.எஸ்.டிசாலைமுழு வதும். | A | 30 | 60 |
| 2 | பிரதானசாலைகள் , பேருந்துசெல்லும் சாலைகள். | B | 20 | 40 |
| 3 | குடியிருப்புபகுதிகளில்உள்ள தெருக்கள். | C | 10 | 20 |

மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்ட விவரங்களுக்கு நகர்மன்ற ஒப்புதல் பெறப்பட்டு பொதுச்சீராய்வு வழிகாட்டு நெறிமுறைகளின்படி, இதனை பொதுமக்கள் அறியும் வகையில் வண்லூர் மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு துறை வாயிலாக 14.04.2022 தினத்தந்தி நாளிதழில் செய்தி வெளியிட்டும், அலுவலக விளம்பரப்பலகையிலும் அறிவிப்பு வெளியிடப்பட்டு மேற்கண்ட பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு உயர்வு செய்யப்படும் காரணிகளின் மண்டல மதிப்பு நிர்ணயம் செய்யப்பட்டமைக்கு ஆட்சேபனைகள் ஏதுமிருப்பின் இதற்கான அறிவிப்பு வெளிடப்பட்ட 30 தினங்களுக்குள் எழுத்து பூர்வமாகவோ நேரிலோ அல்லது தபால் மூலமாகவோ நந்திவரம்–கூடுவாஞ்சேரி நகராட்சி ஆணையருக்கு சமர்ப்பிக்குமாறு தெரிவிக்கப்பட்டிருந்தது. மேற்படி அறிவிப்பில் தெரிவிக்கப்பட்டவாறு 30 நாட்களுக்குள் பொதுமக்கள் மற்றும் இதர தொழில் நிறுவனங்களிடமிருந்து எவ்வித ஆட்சேபனைகள் மற்றும் ஆலோசனைகள் எதுவும் வரப்பெறவில்லை. எனவே 11.04.2022 தேதிய நகர்மன்ற கூட்ட தீர்மானத்தில் அங்கீகரிக்கப்பட்டவாறு 01.04.2022 முதல் சொத்துவரி பொதுசீராய்வு மேற்கொள்ளவும், இதில் நிர்ணயம் செய்யப்பட்ட மண்டல மதிப்பினை உறுதி செய்தும், அதற்கான அறிவிப்பினை மாவட்ட அரசிதழில் வெளியிட்டு தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :–** மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்.43**

இந்த நகரமன்ற தீர்மான எண்.26, நாள்.11.04.2022–ன் அனுமதிபடியும் அரசு வழிக்காட்டுதல்லின்படியும் பொதுச்சீராய்வு பணிகள் மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கப்படுகின்றது.

ஓம்/ M.K.D. கார்த்திக்
நகர்மன்ற தலைவர்
நந்திவரம்–கூடுவாஞ்சேரி நகராட்சி